இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 43 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – புரட்டாசி 05 – சனிக்கிழமை 21 செப்டம்பர் 2024 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 43 : Thiruvalluvar Year - 2055 - Purataasi 05 - Saturday 21 September 2024 - Kovai ★★ 8 Pages ₹ 5.00

## பா.ஜ.க. அரசின் செயல்; இந்தியாவின் கூட்டாட்சித் தத்துவத்திற்கு குந்தகம் விளைவிக்கும்!

# ‘ஒரே நாடு - ஒரே தேர்தல்’ திட்டம் சாத்தியமற்றது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் எதிர்ப்பு!

**சென்னை, செப்.21-**

**‘ஒரே நாடு - ஒரே தேர்தல்’ திட்டம் நடைமுறைக்கு சாத்தியமற்றது எனவும், ஒன்றிய பா.ஜ.க. அரசின் இத்தகைய செயல் இந்தியாவின் கூட்டாட்சித் தத்துவத்திற்கு குந்தகம் விளைவிக்கும் எனவும், கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**



கடந்த 2014ல் ஒன்றியத்தில் பா.ஜ.க. ஆட்சி வந்ததிலிருந்து ஒரே நாடு, ஒரே தேர்தல் என்ற திட்டத்தை கொண்டுவர தொடர்ந்து முனைப்புக் காட்டி வருகிறது. இதனை காங்கிரஸ், தி.மு.கழகம் உள்ளிட்ட பல கட்சிகள் கண்டித்து வருவதுடன் இச்செயல் கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரானது என கடும் எதிர்ப்புகளையும் தெரிவித்து வருகின்றன.

**ராம்நாத் கோவிந்த் கமிட்டி அறிக்கைக்கு ஒன்றிய அரசு ஒப்புதல்!**

ஆனால் பா.ஜ.க. அரசு பிடிவாதமாக ஒரே நாடு, ஒரே தேர்தல் திட்டத்தை செயல்படுத்திட முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 2ஆம் தேதி ஒரு குழு அமைத்தது. இந்தக் குழுவில் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா, நிதி ஆயோக் முன்னாள் தலைவர் என்.கே.சிங் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

இந்தக் குழு ஆராய்ந்த அறிக்கையை குடியரசுத் தலைவரிடம் கடந்த மார்ச் மாதம் அளித்தது. அந்த அறிக்கையில் ‘ஒரே நாடு, ஒரே தேர்தல்’ நடத்தலாம் என பரிந்துரைத்திருந்தது.

இந்நிலையில் பிரதமர் மோடி தலைமையில் ஒன்றிய அமைச்சரவைக் கூட்டம் நேற்று முன்தினம் (18.9.2024) நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஒரே நாடு, ஒரே தேர்தல் தொடர்பான ராம்நாத் கோவிந்த் கமிட்டியின் அறிக்கை குறித்து விவாதிக்கப்பட்டது.

பின்னர் அந்த அறிக்கைக்கு ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்ததாக அறிவிக்கப்பட்டது.

**பா.ஜ.க. அரசின் மலிவான அரசியல் தந்திரம்!**

ஒரே நாடு, ஒரே தேர்தல் திட்டத்தை காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, கேரள முதல்வர் பினராயி விஜயன், திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் டெரிக் ஓபிரையன், ஆம் ஆத்மி கட்சியின் சந்தீப் பதக் எம்.பி., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், சமாஜ்வாதி, இந்தியக் கம்யூனிஸ்ட் உள்ளிட்ட கட்சிகள் நேற்று முன்தினம் எதிர்ப்புத் தெரிவித்து இந்த் திட்டம் நடைமுறைக்கு சாத்தியமில்லாதது. ஜனநாயகத்தை சீர்குலைக்கும், கூட்டாட்சி முறையை பலவீனப்படுத்தும் என்றும் இது பா.ஜ.க.வின் மலிவான தந்திரம் எனவும் கண்டித்திருந்தன.

இந்நிலையில் ‘ஒரே நாடு, ஒரே தேர்தல்’ என்ற பா.ஜ.க.வின் திட்டத்தைக் கண்டித்து கழகத் தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வலைதளப் பதிவில் தெரிவித்திருப்பதாவது:-

**ஒரே நாடு ஒரே தேர்தல் எனும் முன்மொழிவு நடைமுறைக்குச் சாத்தியமற்றதும், இந்தியாவின் பரந்துபட்ட தேர்தல் முறையின் சிக்கல்களைக் கவனத்தில் கொள்ளாததும், கூட்டாட்சியியலைச் சிதைப்பதும் ஆகும். வெவ்வேறு மாநிலங்களில் வெவ்வேறு காலங்களில் தேர்தல் நடப்பது, அந்தந்த மாநிலத்துக்குரிய பிரச்சினைகள், ஆட்சி முன்னுரிமைகள் உள்ளிட்ட காரணங்களால் ஒரே நாடு ஒரே தேர்தல் நடைமுறைக்கு ஒவ்வாதது.**

**எதார்த்தத்துக்கு முரணாக அனைத்து மாநில அரசுகளின் ஆட்சிக்காலத்தையும் ஒரே வரிசையில் கொண்டு வருவது என்பது இயல்பாக நடக்கும் அரசு நிர்வாகத்துக்கு இடைஞ்சலை உருவாக்கும்.**

**இந்த முன்மொழிவு என்பதே மொத்தத்தில் பா.ஜ.க.வின் ஆணவத்தைத் திருப்திப்படுத்துவதற்கான நகர்வுதானே ஒழிய, இதனை ஒருபோதும் அவர்களால் நடைமுறைப்படுத்த இயலாது. இந்திய ஜனநாயகம் ஒற்றைக் கட்சியின் பேராசைக்கு ஏதுவாக வளைக்கப்படலாகாது.**

**ஒன்றிய அரசானது இத்தகைய திசை திருப்பல் உத்திகளில் தனது ஆற்றலை வீணடிப்பதை விட்டுவிட்டு, வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வு, மாநிலங்களுக்கு வளங்களைச் சமமாக பகிர்ந்தளித்தல் ஆகிய முக்கியமான விவகாரங்களில் கவனம் செலுத்த வேண்டும்.**

> **“ இந்த முன்மொழிவு என்பதே மொத்தத்தில் பா.ஜ.க.வின் ஆணவத்தைத் திருப்திப்படுத்துவதற்கான நகர்வுதானே ஒழிய, இதனை ஒருபோதும் அவர்களால் நடைமுறைப்படுத்த இயலாது. இந்திய ஜனநாயகம் ஒற்றைக் கட்சியின் பேராசைக்கு ஏதுவாக வளைக்கப்படலாகாது. ”**

இவ்வாறு கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது கண்டனத்தில் தெரிவித்துள்ளார்.

---

### பா.ஜ.க. கூட்டணி அரசின் காட்டாட்சிக்கு சான்று!

# பீகாரில் பட்டியலின மக்களின் வீடுகள் எரிப்பு!

## காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றச்சாட்டு!

*புதுடெல்லி, செப். 21 -*

*பீகாரில் பட்டியலின மக்களின் 100க்கும் மேற்பட்ட வீடுகள் தீ வைத்து கொளுத்தப்பட்டது. பா.ஜ.க. கூட்டணி அரசின் காட்டாட்சிக்கு மற்றுமொரு சான்று என காங்கிரஸ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.*



*பீகார் மாநிலம் நவாடா மாவட்டத்தில் நிலத்தகராறு காரணமாக வன்முறை ஏற்பட்டுள்ளது.*

*இதில், பட்டியலின மக்களின் வீடுகள் தீ வைத்து கொளுத்தப்பட்டன. இந்த சம்பவத்திற்கு காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.*

*அவர் வெளியிட்ட சமூக வலைதளப்பதிவில், பீகாரில் நடந்த அட்டூழியங்கள், நிதிஷ்குமார் பா.ஜ.க. கூட்டணி அரசின் காட்டு ராஜ்ஜியத்திற்கு மற்றொரு சான்றாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.*

*சுமார் 100 வீடுகள் தீ வைத்து எரிக்கப்பட்டது, துப்பாக்கிச்சூடு நடத்தப் பட்டது, என ஒரே இரவில் ஏழை மக்களின் உடைமைகள் அனைத் தும் சூறையாடப்பட்டதாக தெரிவித்துள்ளார்.*

*பா.ஜ.க. ஆட்சியில் பட்டியலின மக்கள் மீதான அலட்சியம், குற்றங்களை தடுக்க தவறியது உச்சகட்டத்தில் இருப்பதாக குற்றம் சாட்டியுள்ள காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, வழக்கம் போல் பிரதமர் மோடி மவுன மாகவும், அதிகார பேராசையில் பீகார் முதலமைச்சர் நிதிஷ் குமார் அக்கறையின்றியும் இருப்பதாக காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே விமர்சித்துள்ளார்.*

---

### பராமரிப்பு பணி காரணமாக

# சென்ட்ரல், எழும்பூர் ரயில் சேவைகளில் மாற்றம்!

சென்னை, செப். 21–

பராமரிப்புப் பணி காரணமாக சென்ட்ரல், எழும்பூரிலிருந்து இயக்கப்படும் ரயில் சேவையில் உடனடியாக மாற்றம் செய்யப்படுவதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

இதுகுறித்து தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது: –

சென்னை சென்ட்ரலில் இருந்து டெல்லிக்கு (12615) இயக்கப்படும் ஜிடி எக்ஸ்பிரஸ் ரயில் பராமரிப்புப் பணி காரணமாக அடுத்த அறிவிப்பு வரும் வரை எழும்பூரில் இருந்து டெல்லிக்கு மாலை 5.40 மணிக்கு புறப்படும். மறுமார்க்கமாக டெல்லியில் இருந்து சென்னை சென்ட்ரலுக்கு (12616) இயக்கப்படும் ஜிடி எக்ஸ்பிரஸ், அடுத்த அறிவிப்பு வரும் வரை சென்ட்ரல் ரயில் நிலையத்துக்கு பதிலாக எழும்பூர் ரயில் நிலையம் வந்தடையும்.

எழும்பூர் – காரைக்கால் (16175) எக்ஸ்பிரஸ் ரயில் அடுத்த அறிவிப்பு வரும் வரை தாம்பரத்தில் இருந்து இரவு 9.30 மணிக்கு காரைக்காலுக்கு இயக்கப்படும். மறுமார்க்கமாக காரைக்கால்எழும்பூர் (16176) எக்ஸ்பிரஸ் ரயில் எழும்பூர் ரயில் நிலையத்துக்கு பதிலாக தாம்பரம் ரயில் நிலையம் வரை மட்டுமே இயக்கப்படும்.

எழும்பூர் – மங்களூரு (16159) எக்ஸ்பிரஸ் ரயில் அடுத்த அறிவிப்பு வரும் வரை தாம்பரத்தில் இருந்து இரவு 11.50 மணிக்கு மங்களூருக்கு இயக்கப்படும்.

மறுமார்க்கமாக மங்களூரு– எழும்பூர் (16160) எக்ஸ்பிரஸ் ரயில் எழும்பூர் ரயில் நிலையத்துக்கு பதிலாக தாம்பரம் ரயில் நிலையம் வரை மட்டுமே இயக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

### கர்நாடகாவில் பாலியல் குற்றச்சாட்டில் பா.ஜ.க. எம்.எல்.ஏ. மீது வழக்கு!

பெங்களூரு, செப். 21–

கர்நாடகாவில் பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டில் பா.ஜ.க. எம்.எல்.ஏ. மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

கர்நாடகாவில் ராஜேஸ்வரி நகர் சட்டப்பேரவைத் தொகுதி பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினரான முனிரத்னா மீது பெங்களூருவைச் சேர்ந்த பெண் ஒருவர் ராம்நகரா மாவட்டத்தில் உள்ள ககலிபுரா காவல் நிலையத்தில் பாலியல் புகார் அளித்துள்ளார். ககலிபுராவில் உள்ள பண்ணை வீட்டில் தன்னை பாலியல் வன்கொடுமை செய்ததாக குற்றம் சாட்டியுள்ளார்.

ஆபாசமாக வீடியோ எடுத்து மிரட்டுவதாகவும் தெரிவித்துள்ளார். அந்த பெண்ணின் புகாரைத் தொடர்ந்து, பா.ஜ.க. எம்.எல்.ஏ. முனிரத்னா உள்பட 7 பேர் மீது பாலியல் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பெண்ணிடம் காவல்துறையினர் வாக்கு மூலம் பெற்று விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஏற்கனவே, ஒப்பந்ததாரரை சாதியைக் குறிப்பிட்டு அவதூறாக பேசியதுடன் கொலை மிரட்டல் விடுத்த வழக்கில் கைது செய்யப்பட்டு அக்ரஹாரா சிறையில் முனிரத்னா அடைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

# டெல்லி முதலமைச்சராக இன்று பதவியேற்கிறார் அதிஷி!

புதுடெல்லி, செப். 21–

டெல்லி புதிய முதலமைச்சராக அதிஷி, இன்று பதவியேற்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

டெல்லி மதுபானக் கொள்கை வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்த முதலமைச்சர் கெஜ்ரிவாலுக்கு உச்சநீதிமன்றம் நிபந்தனையுடன் ஜாமின் வழங்கியது.

முதலமைச்சர் பணியை ஆற்றவிடாமல் பல்வேறு நிபந்தனைகளுடன் உச்சநீதிமன்றம்



ஜாமின் வழங்கி உள்ளதாக கெஜ்ரிவால் குற்றஞ்சாட்டி தனது பதவியை ராஜினாமா செய்தார்.

இதனிடையே டெல்லி ஆம் ஆத்மி எம்.எல்.ஏக்கள் கூட்டத்தில் சட்டமன்ற கட்சி தலைவராக தேர்வு செய்யப்பட்ட அதிஷி மர்லேனா, துணை நிலை ஆளுநரைச் சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரினார்.

இதையடுத்து இன்று டெல்லியின் புதிய முதலமைச்சராக அதிஷி மர்லேனா பதவியேற்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிஷிக்கு ஆளுநர் வி.கே. சக்சேனா பதவிப்பிரமாணமும், ரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைக்கவுள்ளார்.

---

### இந்தியாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில்

# தென் மாநிலங்களின் பங்கு 30 சதவிகிதம்!

## பொருளாதார வழிகாட்டுதல் குழு அறிக்கை!

*புதுடெல்லி, செப். 21 -*

*இந்தியாவின் ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதத்தில், தென் மாநிலங்களின் பங்கு மட்டும் 30 சதவிகிதம் என பொருளாதார வழி காட்டுதல் குழு வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.*

*கடந்த செவ்வாய்க் கிழமையன்று, பொருளாதார வழி காட்டுதல் குழு, பிரதமர் நரேந்திர மோடியிடம் உள்நாட்டு உற்பத்தி குறித்த அறிக்கை ஒன்றை அளித்தது.*

*அந்த அறிக்கையில், இந்திய மாநிலங்களின் பொருளாதார நடவடிக்கைகள் குறித்து விளக்கமாக எடுத்துக்கூறப்பட்டுள்ளது.*

*அதன்படி, இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில், தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா, ஆந்திரா, தெலுங்கானா ஆகிய தென் மாநிலங்களின் உள்நாட்டு உற்பத்தி சதவிகிதம் 30 சதவிகிதம் என தெரிய வந்துள்ளது.*

*மேற்கு வங்க மாநிலம் பொருளாதார ரீதியில் சரிவை சந்தித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*மகாராஷ்டிர மாநிலத்தின் ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதம் 15 லிருந்து 13 புள்ளி மூன்று சதவிகிதமாக சரிந்துள்ளது.*

*அதே சமயம், உத்தரபிரதேச மாநிலம் ஒன்பது புள்ளி ஐந்து சதவிகிதமாகவும், பீகார் நான்கு புள்ளி மூன்று சதவிகிதமாகவும் இந்தியா பொருளாதார உள்நாட்டு உற்பத்தியில் இடம் பிடித்துள்ளது.*